அவர்கள் குறிப்பிட்டதுபோல, சௌடேஸ்வரி கல்லூரி மாற்றி அமைக்கப்பட்டதே அவர்களுடைய ஆட்சியில்தான். அதனை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதனால், அதையும் நாங்கள் பரிசீலிப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

76—

புறவழிச் சாலை

*480—**திரு. ப. அப்துல் சமது:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணப்பாறை தொகுதி, மணப்பாறையில் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை, அதாவது D.P.R. *ரூ.40.00 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.*

திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மணப்பாறை நகரத்தினுடைய மையப் பகுதியிலே மாரியம்மன் கோயில் இருக்கிறது. அதன் அருகிலேயே ஜும்மா பெரிய பள்ளிவாசல், அதற்கு அருகிலேயே புனித லூர்து மாதா ஆலயம் என அமையப்பெற்று, மத நல்லிணக்க நகரமாக மணப்பாறை நகரம் திகழ்கிறது. அந்த நகரத்திற்குள் வரக்கூடிய வாகனங்கள் அதிகமான போக்குவரத்து நெரிசலில் சிக்குகின்ற சூழல் இருக்கிறது. அதை மாற்றியமைப்பதற்காக. . .*

2022 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அந்தப் புறவழிச் சாலை அமைக்க ஆவன செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் இல்லையா? அடுத்த கேள்வியை* correct *ஆகக் கேளுங்கள்.*

திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணப்பாறை நகருக்குப் புறவழிச் சாலை அமைக்கும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி முடிவுறும் நிலையிலே, புறவழிச் சாலை அமைக்கும் பணிக்கான மதிப்பீடு தயார் செய்யப்படும். மணப்பாறை புறவழிச் சாலை அமைக்கும் பணிக்கு 22–1–2021 அன்று அனுமதி வழங்கப்பட்டது. அதனுடைய தொடர்ச்சியாக இந்தப் புறவழிச் சாலை திருச்சி–திண்டுக்கல் சாலையில் கி.மீ. 360/4–ல் இடது பக்கம் ஒரு பிரிவாகவும், இரயில்வே பாதையினைக் கடந்து முசிறி–புதுக்கோட்டை–சேதுபாவாசத்திரம் சாலையில் கி.மீ. 44/0–ல், கோவில்பட்டி–மணப்பாறை சாலையில் கி.மீ. 8/5–ல் கடந்து, மணப்பாறை–துவரங்குறிச்சி சாலையில் கி.மீ. 2/0 வடுகப்பட்டி வரை சென்று இந்தச் சாலை முடிவடைகிறது. இப்புறவழிச் சாலையின் மொத்த நீளம் 7.5 கி.மீ. ஆகும். விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி முடிவடைந்தபின், நிலம் கையகப்படுத்தப்பட்டு, மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, புறவழிச் சாலை அமைக்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

அதே நேரத்தில், மணப்பாறை நகரத்தில் போக்குவரத்து செரிவு அதிகமாக இருப்பது அரசுக்குத் தெரியும். அதனால்தான், இப்பணியை விரைந்து செயல்படுத்தவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, சென்ற வாரம் எனது தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, அந்தப் பணியை விரைவுபடுத்துவதற்காக நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு உடனடியாக நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.*

திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைந்து செயல்பட்டு இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தந்தமைக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியிலே பேரவை விதி 110–ன்கீழ் அறிவிக்கப்பட்ட இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி, நில எடுப்புப் பணிகளின் காரணமாக காலதாமதம் ஆகிறது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் அப்பணியின்மீது சிறப்புக் கவனம் செலுத்தி, நிதியொதுக்கீட்டுக்கான அரசாணையை வெளியிட்டு, நில எடுப்புப் பணி முடிந்து, அந்தப் பணிக்கான அரசாணையும் வெளியிடப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்ட நிலையில், தற்போது கால அவகாசம் அதிகமாகின்ற நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்தப் பணியை விரைவிலே துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியைப் பொறுத்தளவில், நில எடுப்புப் பணியில்தான் பிரச்சினைகள் அதிகமாக இருக்கின்றன. அரசின் சார்பாக திட்டங்களைத் தயார் செய்கிறோம். அதற்குப் பின்னால் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நில எடுப்புப் பணிகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டாலும்கூட, வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாகத்தான் நில எடுப்புப் பணி செய்யப்படுகிறது. அந்த*

அடிப்படையிலே பல நேரங்களிலே மாவட்ட வருவாய்த் துறை அலுவலர்களுக்கு பல்வேறு பணிகள் மாவட்டத்திலே இருக்கின்றன. அதனால், அவர்கள் இப்பணிகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல் வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட ஏனைய பணிகளைச் செய்கின்ற காரணத்தினால்தான் பொதுவாக எல்லா இடங்களிலும், குறிப்பாக இரயில்வே மேம்பாலப் பணியாக இருந்தாலும் சரி, புறவழிச் சாலைப் பணியாக இருந்தாலும் சரி, நில எடுப்புப் பணியில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் எடுத்துச் சொன்னதன் விளைவாக, தற்போது ஐந்து D.R.O–க்களை தனியாக அப்பணிக்காக பணியமர்த்தி, அவர்களுக்குக்கீழ் தாசில்தார்கள், வருவாய் ஆய்வாளர்கள் என 144 பணியாளர்களை நியமித்திருக்கிறார்கள். அந்தப் பணிகளைப் பிரித்து எங்கெங்கெல்லாம் பணிகளில் தொய்வு ஏற்படுகிறதோ, முன்னுரிமை அடிப்படையில், அந்த இடங்களிலெல்லாம் தனியாக Special DRO, பதவிக்கு இணையான அலுவலர்களைத் தனியாகப் பணியமர்த்தி, எங்கெல்லாம் காலதாமதம் ஏற்படுகிறதோ, அந்த இடங்களிலெல்லாம், அது புறவழிச் சாலையாக இருந்தாலும் சரி, இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியாக இருந்தாலும் சரி, நில எடுப்புப் பணி சம்பந்தமான கோரிக்கைக்கு அரசினால் முன்னுரிமை அளிக்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதனை வலியுறுத்தினார்கள். நில எடுப்புப் பணிக்காக ஒவ்வோராண்டும் Budget–ல் தொகை ஒதுக்கப்படுகிறது. முதலில் ஓராண்டு அடிப்படையில் அரசு பணிகளைத் துவங்கி செய்கின்றது, அதன் பிறகு அதற்கான guideline value ஏறிக்கொண்டே போகின்றபட்சத்தில், திட்ட மதிப்பீடுகூட அதிகமாக ஏற்பட்டு நிதித் துறைக்கு பணச் சுமை ஏற்படுகிறது. இதன் காரணமாகதான் இப்பணியினை விரைந்து முடிக்கும் அடிப்படையில் 5 DRO–க்கள் பணியிலமர்த்தப்பட்டுள்ளனர். மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்த மேம்பாலப் பணியினையும் கணக்கில் எடுத்துக்கொண்டு முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.

திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி, ஜெயங்கொண்டம் நகரில் கடும் போக்குவரத்து நெரிசல்

ஏற்படுகிறது. இதனால் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்குச் செல்கின்ற மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகிறார்கள். ஜெயங்கொண்டத்திற்குத் தென்புறம் திருச்சி–சிதம்பரம் சாலையில் ஏற்கெனவே bypass சாலை அமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதேபோன்று விருத்தாசலம்–கும்பகோணம் சாலையில், மகிமைபுரம்–சின்னவளையம் வரை TNRSP phase–II–ல் ஏற்கெனவே திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகிமைபுரத்திலிருந்து சின்னவளையம் வரை 4 கி.மீ. தூரத்திற்கு புறவழிச் சாலை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டுவிட்டார்; புறவழிச் சாலைக்கு TNRSP, phase–II-ன் மூலமாகப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார். எனவே, அதையும் நான் கருத்தில் எடுத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட பொறியாளர்களை அழைத்து, இப்பணிக்கு முன்னுரிமை அளித்து உடனே புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசின் சார்பாக ஆணையிடுவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள்.

திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர்–பட்டுக்கோட்டை, பட்டுக்கோட்டை–அறந்தாங்கி இருவழிச் சாலையை தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தில் நான்குவழிச் சாலையாக அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

2022 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அமைச்சராகப் பதவி வகித்த ஒரு மூத்த உறுப்பினராவார். சென்ற ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டம்" என்கின்ற ஒரு புதிய திட்டத்தை அறிவித்து ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்தை இணைக்கும் இருவழிச் சாலைகளையெல்லாம் நான்குவழிச் சாலைகளாக மாற்ற வேண்டும், அதேபோன்று மாவட்டத்திலிருந்து தாலுகா தலைநகரை இணைக்கின்ற இருவழிச் சாலைகளையெல்லாம் நான்குவழிச் சாலைகளாக மாற்ற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இந்த ஆண்டு, தஞ்சாவூர்-பட்டுக்கோட்டை -ஒரத்தநாடு பகுதி சம்பந்தமான கோரிக்கையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, நான் தஞ்சாவூர், திருவாரூருக்கு அடிக்கடி செல்லும் காரணத்தினால், முடிந்தால் அந்தச் சாலையினை நானே நேரடியாகப் பார்த்து, இந்த ஆண்டிலேயே அப்பணியை எடுத்துக்கொள்வதற்கு வேண்டிய முயற்சியை அரசு எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. A. நல்லதம்பி அவர்கள்.*

திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் புறவழிச் சாலைக்கு அரசாணை எண் 8-ன்மூலம் 2011 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் ஆட்சிக் காலத்தில், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், 10 ஆண்டுகளாக கிடப்பிலிருக்கின்ற திருப்பத்தூர் புறவழிச் சாலைப் பணியை அரசு செய்யுமா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு என்னை பொறுப்பு அமைச்சராக நியமித்ததன் விளைவாக, இன்றைக்கு அந்த மாவட்டத்திற்கு நான் முன்னுரிமை அளித்து, அந்த மாவட்டம் புதிய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினால், வாரத்திற்கு ஒரு முறை அந்த*

மாவட்டத்திற்குச் சென்று எந்தெந்த அலுவலகங்கள் அங்கு வரவேண்டும் என்பதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அந்தந்த துறை சார்ந்த அலுவலர்களை பணியிடங்களில் அமர்த்துவதில் நான் கண்ணும்கருத்துமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறேன். அதன் அடிப்படையில் ஏற்கெனவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. நல்லதம்பி அவர்கள், திருப்பத்தூருக்கு புறவழிச் சாலை வேண்டுமென்று என்னிடத்தில் கடிதம் கொடுத்திருக்கிறார். அந்தக் கடிதத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட அரசுப் பொறியாளர்களை அழைத்து, அதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறேன். அந்தக் கோரிக்கைக்கு முன்னுரிமை அளிக்கப்படும். முடிந்தால் இந்த ஆண்டே அதனை எடுத்துக்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு தொடர்ந்து செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. கே.ஏ. செங்கோட்டையன், அவர்கள்.*

முற்பகல் 10–20

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோபிசெட்டிப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நான்குவழிச் சாலைகள் தற்போது ஈரோடு–கோபிசெட்டிப்பாளையம் வரை விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன வணிக மையங்கள் அதிகமாக இருந்தும், கோபிசெட்டிப்பாளையம் நகரத்திற்குள் பொருட்களைக் கொண்டுவர இயலவில்லை. அதற்காக முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள் புறவழிச் சாலை ஒன்றை உருவாக்குவதற்கு 19 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தார்கள். புறவழிச் சாலையை மிக விரைவில் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் மிக நீண்ட நாள் உறுப்பினர், மிக மூத்த உறுப்பினர். ஏற்கெனவே முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அதற்கு நிதியை ஒதுக்கிவிட்டார்*

2022 ஏப்ரல் 8]

என்ற தகவலையும் பகிர்ந்துகொண்டிருக்கிறார்கள். அவ்வாறு நிதி ஒதுக்கப்பட்டிருக்குமேயானால், திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிந்து, திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டிருக்குமேயானால், அதற்கு முன்னுரிமை அளித்து இந்த ஆண்டே அந்தச் சாலையைச் செப்பனிடுவதற்கு வேண்டிய முயற்சிகளை இந்த அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி அவர்கள்.*

திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோட்டிலிருந்து குமாரபாளையத்திற்கு இரயில் செல்கின்ற பாதை, இரயில் வருகின்ற பாதை என்று இரண்டு இரயில்வே தண்டவாளங்கள் செல்கின்றன. திருச்செங்கோட்டில் பள்ளிகள், கல்லூரிகள் அதிகமாக இருக்கின்றன. அந்த வழியில் வாகனங்கள் அதிகமாகச் செல்கின்றன. ஏற்கெனவே அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஒரு மேம்பாலம் கட்டுவதற்காக அரசாணை வெளியிடப்பட்டு 70 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்திற்குப் பின்னால் அதில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருக்கின்றது. இது மிக முக்கியமான தேவை. ஏனென்றால், காலையில் 8 மணிக்கு 500* vehicles*–க்கும் அதிகமாக வருகின்றன. பள்ளி* vehicles *மற்றும் கல்லூரி* vehicles *வருகின்றன. அவ்வாறு வருகிறபோது இரண்டு* railway gates*–ல் ஏதாவது ஒரு* railway gate*–ஐ மூடிவிட்டார்கள் என்றால், கிட்டத்தட்ட 15, 20 நிமிடங்கள் வாகனங்கள் நின்று விடுகின்றன. அதற்காக இரண்டு தண்டவாளங்களுக்கும் சேர்த்து ஒரு மேம்பாலம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அரசாணை வெளியிட்டிருந்தார்கள். ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அந்தப் பணிகள் நின்றுவிட்ட காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு நிறைவேற்றித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்கள் சொல்கின்ற பாதையை நானும் அறிவேன். அதில் பலமுறை நானும் பயணம் செய்திருக்கிறேன். இது சம்பந்தமாக ஏற்கெனவே, திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் என்னிடத்தில் கடிதம் கொடுத்து, இதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால், நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப்போல, இரயில்வே பாலங்கள், புறவழிச் சாலை அமைக்கும் பணிகளைப் பொறுத்தவரையில், Land Acquisition பிரச்சினைகளால்தான் நிலுவையில் இருக்கின்றன. அந்த இடத்தில் L.A. பிரச்சினை இருக்கிறதா என்பது தெரியாது. நில எடுப்பில் இருக்கின்ற பிரச்சினைகளால்தான் இரயில்வே பாலங்கள் அமைப்பதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, 5 DRO–க்கள், 144 தாசில்தார்கள், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் இதர பணியாளர்களை நியமித்திருக்கிறார்கள். அதனால், விரைந்து செயல்படுவோம் என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே L.A. பிரச்சினை இல்லை என்று சொல்கின்ற காரணத்தினால் அதில் முழு கவனம் எடுத்துக்கொண்டு, இந்த ஆண்டே இரயில்வே பாலம் அமைப்பதற்கு வேண்டிய பணிகளைச் செய்வோம். பொதுவாக, இரயில்வே பாலம் அமைப்பதில் மற்றொரு சிக்கல் என்னவென்றால், போக்குவரத்தினைக் கணக்கில்கொண்டுதான் இரயில்வே பாலத்தை அமைக்கிறோம். போக்குவரத்து அதிகரிக்கும்போது, 50 சதவிகிதம் மாநில அரசாங்கத்தின் நிதியிலிருந்தும், 50 சதவிகிதம் இரயில்வே துறையிடமிருந்தும் நிதி பயன்படுத்தப்பட்டுத்தான் பாலத்தைக் கட்டி முடிக்கிறோம். பல இடங்களில், இரயில்வே பாலங்களைப் பொறுத்தவரையில், approach பாலங்களை தமிழக அரசின் சார்பில் கட்டிவிடுகிறோம். இடையில் railway track செல்கின்ற இடத்தில் நாங்கள்தான் கட்டுவோம் என்று இரயில்வே துறையினர் சொல்கிறார்கள். நாம் பாலத்தைக் கட்டினாலும், அவர்கள் பாலத்தைக் கட்டுவதற்கு சில நேரங்களில் காலதாமதம் ஏற்படுகின்றது. இப்படி பல சூழ்நிலைகள் இருப்பதை அறிந்து நான் ஒரு மாத காலத்திற்கு முன்னால், இரயில்வே துறையைச் சார்ந்த General Manager, சம்பந்தப்பட்ட பொறியாளர் ஆகியோரையெல்லாம் அழைத்துப்

2022 ஏப்ரல் 8]

பேசி, பாலங்கள் கட்டுவதில் காலதாமதம் ஏற்படுவது குறித்து ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்தி, உடனே பணியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பாலம் கட்டுகின்ற விஷயத்தையும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்ற காரணத்தினால், இந்தப் பாலத்தை அமைப்பதற்கு இந்த அரசு விரைந்து செயல்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட* Kurangani to Top Station *என்கிற சாலையையும், சோத்துப்பாறையிலிருந்து அகமலை என்ற மலைக் கிராமத்திற்குச் செல்லும் சாலையையும் அமைப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் சார்பாக அரசாணை பிறப்பிக்கப்பட்டு, நில எடுப்பிற்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணி இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது என்பதனை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு கடிதங்கள் மூலமாகவும் நான் தெரிவித்திருக்கிறேன். எனவே, அந்தச் சாலையினுடைய நிலை என்ன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நான்கு தினங்களுக்கு முன்னால் இது சம்பந்தமான ஒரு கடிதத்தை எனக்கு அனுப்பியிருந்தார்கள். உடனடியாக சம்பந்தப்பட்ட பொறியாளரை அழைத்து இந்தப் பணிகளை முடிக்க ஏன் காலதாமதம் ஆகிறது, உடனடியாக இந்தப் பணிகளைச் செய்து முடிக்கலாமே என அவரிடம் கேட்டபோது, "இந்த இடங்கள் முழுக்க முழுக்க வனத் துறைக்குச் சொந்தமான இடங்களாக இருக்கின்ற காரணத்தினால், வனத் துறையிடமிருந்து*

அனுமதி பெறப்படவில்லை” என்று சொன்னார். இருந்தாலும், திரும்பவும் துறையின் செயலாளர் அவர்களை அழைத்து, மத்திய அரசின் வனத் துறையின் செயலாளர் அவர்களுக்குக் கடிதம் ஒன்றை எழுதுங்கள் என்று தெரிவித்தேன். ஏனென்று சொன்னால், அங்குள்ள மக்கள் தங்களுடைய பொதி சுமையைக்கூட சுமந்து செல்ல இயலவில்லை. அங்கு விளையும் காய்கறிகளைக்கூட சந்தைக்கு எடுத்துச் செல்ல இயலாமல், தலையில் சுமந்து காய்கறிகளை எடுத்துச் செல்லும் ஒரு சூழ்நிலை உள்ளது; மலைப் பகுதியில் உள்ள கிராம மக்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, துறையின் செயலாளர் அவர்களை அழைத்து, உடனே இதற்குரிய அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன். நானும், இதில் தனிக் கவனம் செலுத்தி, நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்கிற அந்தப் பாதை அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

74—

தடுப்பணை

***12588—திரு. ஐ.பி. செந்தில்குமார்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி தொகுதி, பழனி வட்டம், காவலப்பட்டி கிராமம், பச்சையாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, பழனி வட்டம், காவலப்பட்டி கிராமத்தில் பச்சையாற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டத்திற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு Technical Feasibility *அறிக்கை நீர்வளத் துறையின் திட்டப் பிரிவின்கீழ் (*Plan Formulation*) ஆய்வில் உள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*